



# தினப்புயல்

news THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-02 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 41


# மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு நீக்கம்



*நாடு முழுவதும் தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி காலை 4 மணியுடன் நீக்கப்படவுள்ளது.*

*இதனை, கொவிட் தொற்று பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். (02)*

## சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தற்காலிகத் தடை




வெல்லவாய - வெலியார பிரதேசத்திற்கு சுற்றுலாப் பிரயாணிகள் செல்வதற்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெல்லவாய பிரதேச சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (02)

## 16 மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை

*நாட்டில் 16 மாவட்டங்களில் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கமைய, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண மக்கள் போன்று குருநாகல், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்களும் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (02)*

## சூப்பர் 12ல் நமீபியா




டி20 உலகக்கோப்பை தொடரில் நேற்று நடைபெற்ற 11ஆவது லீக் ஆட்டத்தில் அயர்லாந்து - நமீபியா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் டொஸ் வென்ற அயர்லாந்து அணி முதலில் பேட்டிங் செய்ய தீர்மானித்து களமிறங்கியது. அதன்படி விளையாடிய அந்த அணியில் தொடக்க வீரர்கள் கெவின் ஓ பிரையன் 25. போல் ஸ்டிர்லிங் 38. பால்பிர்னி 21 ஆகியோரைத் தவிர மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்து வெளியெறினர். (02)

## கருப்பு பூஞ்சைத் தொற்று காரணமாக இலங்கையில் முதல் மரணம்




*கராப்பிட்டி வைத்தியசாலையில் உயிரிழந்த நபர் ஒருவரின் பிரேத பரிசோதனையின் பின்னர் மேலதிக பரிசோதனையில் அவருக்கு கருப்பு பூஞ்சை நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி குறித்த நபர் கராப்பிட்டி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். (02)*

## இலங்கைக்கும் பஹ்ரைனுக்கும் இடையில் அரசியல் ஆலோசனைகள்



இலங்கை மற்றும் பஹ்ரைனுக்கு இடையேயான அரசியல் ஆலோசனைகளின் முதலாவது அமர்வு ஒக்டோபர் 21 மெய்நிகர் தளத்தில் நடைபெற்றது. இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும். பொது நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்த கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும். அரசியல் ஆலோசனைகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 2009 இல் கைச்சாத்திடப்பட்டது. (02)

## மாகாணங்களுக்கு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று (22) நடத்திய பேச்சுவார்த்தையின் போது இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகஇராணுவதளபதிஊடகங்களுக்குதெரிவித்துள்ளார்.

## சுற்றுலாப் பயணிகள்...

குறித்த பிரதேசத்திற்கு கடந்த சில தினங்களில் சென்ற சிலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதன் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுலா செயற்றிட்டத்தின் கீழ் பாதுகாப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட பின்னர் குறித்த பிரதேசம் மீண்டும் சுற்றுலாப் பிரயாணிகளுக்குத் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அரசாங்க தகவல் திணைக்களம்)

## கருப்பு பூஞ்சை...

56 வயதுடைய குறித்த நபரின் பிரேத பரிசோதனை கராப்பிட்டி வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த நபரின் உடற்பாகங்களை மேலதிக பரிசோதனைக்காக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்ப சட்ட வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்திருந்தார்.

குறித்த மாதிரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கை கடந்த தினம் கராப்பிட்டி வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. குறித்த அறிக்கையின் படி, உயிரிழந்த குறித்த நபரின் உடலில் கருப்பு பூஞ்சை தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

## 16 மாவட்ட மக்களுக்கு...

இதேவேளை, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பி.ப. 1.00 மணிக்குப்பின்னர்மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய, சப்ரகமுவ, மேல், ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## அயர்லாந்தை வீழ்த்தி...

இதனால் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 125 ரன்களை சேர்த்தது. நமீபியா அணி தரப்பில் ஜோன் ஃபிரைலிங் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதையடுத்து இலக்கை துரத்திய நமீபியா அணியில் கிரேக் வில்லியம்ஸ் 15 ரன்னிலும், ஸேன் கிரீன் 24 ரன்னிலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

அதன்பின் ஜோடி சேர்ந்த் கேப்டன் எரஸ்மஸ் - டேவிட் வைஸ் இணை அதிரடியாக விளையாடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இதில் எரஸ்மஸ் அரைசதம் கடந்தார். இதன் மூலம் 18.3 ஓவர்களிலேயே நமீபியா அணி இலக்கை எட்டி 8 விக்கெட் வித்தியாசத்தில் அயர்லாந்தை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம் நமீபியா அணி முதல் முறையாக சூப்பர் 12 சுற்றுக்கு தகுதி பெற்றது. **(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)**

## நைஜீரியாவில் கடத்தப்பட்ட 30 மாணவர்கள் விடுவிப்பு

நைஜீரியாவில் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட 30 கல்லூரி மாணவர்கள் நான்கு மாதத்துக்கு பின் நேற்று விடுவிக்கப்பட்டனர். மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் கெப்பி மாகாணத்தில் உள்ள பள்ளியில் இருந்து நான்கு மாதங்களுக்கு முன் துப்பாக்கி முனையில், 70 மாணவர்கள் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டனர். அடுத்த சில நாட்களில் ஆறு மாணவர்கள் மீட்கப்பட்டனர். ஒரு மாணவரை பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். கடத்தப்பட்டவர்களை மீட்கும் பணி தொடர்ந்தது.

இந்நிலையில் நேற்று 30 மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் எவ்வாறு மீட்கப்பட்டனர் என்ற விபரத்தை அரசு வெளியிடவில்லை. மீதமுள்ள மாணவர்களை மீட்கும் பணி தொடர்வதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. “இந்த ஆண்டு மட்டும் நைஜீரியாவில் 1,400 மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். அதில் 200 பேர் இன்னும் விடுவிக்கப்படவில்லை“ என, யுனிசெப் தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இலங்கைக்கும் பஹ்ரைனுக்கும்...

**தற்போதுள்ள உறவுகளை ஒத்துழைப்புக்கான புதிய வழிகளில் மேலும் மேம்படுத்துவது குறித்து பிரதிநிதிகள் ஆலோசித்தனர். இச்சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, மனிதவளம், கல்வி, கலாச்சாரம், சுற்றுலா, சுகாதாரம், விவசாயம், திறன் அபிவிருத்தி மற்றும் பரஸ்பர நலனுக்கான தொழிற்பயிற்சி உள்ளிட்ட பல பகுதிகள் அடையாளம் காணப்பட்டன.**

**மேலும், புதிய இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இத்தகைய ஒத்துழைப்பை முறைப்படுத்துவதற்காக கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்யவும் இந்த சந்திப்பின் போது முன்மொழியப்பட்டது.**

**இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்புக்கள் மற்றும் பஹ்ரைனில் உள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் நலன் மற்றும் இலவச தடுப்பூசி குறித்த அர்ப்பணிப்பு குறித்து பஹ்ரைன் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு இலவச தடுப்பூசிகளை வழங்கியதன் மூலம் வசதிகளை வழங்கிய பஹ்ரைன் அரசாங்கத்துக்கு நன்றி மற்றும் பாராட்டுக்களைத் தெரிவித்த பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, திறமையான மற்றும் அரைத் திறன் கொண்ட இலங்கையர்களுக்கான பஹ்ரைனில் உள்ள தொழில் வாய்ப்புக்களை ஆராய்வதற்கு இலங்கை தயாராக உள்ளதாகக் குறிப்பிட்டார்.**

**வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே இலங்கைத் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கியதுடன், பஹ்ரைன் வெளிநாட்டு அமைச்சின் துணைச் செயலாளர் (அரசியல் விவகாரங்கள்) கலாநிதி. ஷேக் அப்துல்லா பின் அஹமத் அலி கலீபா பஹ்ரைன் தரப்பினருக்குத் தலைமை தாங்கினார்.**

**புது டில்லியில் வதியும் இலங்கைக்கான பஹ்ரைன் இராச்சியத்தின் தூதுவர் மாண்புமிகு அப்துல்ரஹ்மான் முகமது அல்-கவுத், ஆபிரிக்க ஆசிய விவகாரங்கள் திணைக்களத் தலைவர் மாண்புமிகு தூதுவர் பாத்திமா அப்துல்லா அல்-டான், ஆபிரிக்க ஆசிய விவகாரங்கள் திணைக்களத் தலைவர் ஃபஹத் முஹமத் அல்-ஃபைஹானி, ஆபிரிக்க ஆசிய விவகாரங்கள் திணைக்களத்தின் முதல் செயலாளர் மற்றும் பஹ்ரைன் வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள் பஹ்ரைன் பிரதிநிதிகளில் அடங்கியதுடன், வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இலங்கைப் பிரதிநிதிகளில் உள்ளடங்கினர். இலங்கை மற்றும் பஹ்ரைன் ஆகியவற்றுக்கு இடையேயான அரசியல் ஆலோசனையின் இரண்டாவது அமர்வு 2022 இல் இலங்கையின் கொழும்பில் நடைபெறும்.**

## ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான அறிவிப்பு

நாட்டில் உள்ள அனைத்து அரசாங்க பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகளையும் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியினை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அசேல குணவர்தன வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டத்தின் கீழ் கடந்த 21 ஆம் திகதி 200க்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி, இரண்டாம் கட்டத்தின் கீழ் 200 க்கும் அதிக மாணவர்களை கொண்ட பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகளை ஆரம்பிக்க சுகாதார அமைச்சினால் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், கத்தோலிக்க பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகளை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இன்று முதல் வீதி போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும்

ஹொரணை - கொழும்பு வீதியில் கொஹுவல சந்தியில், பொது போக்குவரத்து பஸ்களைத் தவிர ஏனைய வாகனங்களின் போக்குவரத்துக்களை மட்டுப்படுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

அதன்படி இன்று முதல் டிசம்பர் 20 ஆம் திகதி வரை அந்த பாதையின் ஊடாக போக்குவரத்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கொஹுவல மேம்பால நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதினால் வாகனப் போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் வாகன சாரதிகள் முடிந்தவரை மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களம்)**